**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : CC.No.91/2025 |
| Deposition of Witness for | : PW – 3 |
| Name and Age | : யாசின் (வயது 48) |
| Father / Husband Name | : பாட்ஷா |
| Occupation | : போர்மேன் EB |
| Village | : கர்த்தாரபட்டி |
| Taluk | : பாலக்கோடு |

**நாள்** – 08.06.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**A2, A4, A5 present. A1, A3, A6 absent. Petition U/s.355 of BNSS filed and allowed.**

**PW– 3**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் கர்த்தாரபட்டியில் குடியிருந்துக்கொண்டு EB–யில் போர்மேனாக வேலை செய்து வருகிறேன். 07.02.2025ம் தேதி கோடிக்கானூர் SS–5 16KVA என்ற டிரான்ஸ்பார்மில் திருடுபோயிருப்பதாக மறுநாள் 08.02.2025ம் தேதி காலை 08.00மணிக்கு மாதப்பன் லைன் இன்ஸ்பெக்டர் என்பவர் எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார் அப்போது நான் அலுவலகத்தில் இருந்தேன். அப்போது AE திவாகர், மாதப்பனுடன் நானும் சம்பவ இடத்திற்கு சென்றோம். டிரான்ஸ்பார்ம் உடைந்து அதில் இருந்த ஆயில் நான்கு பக்கமும் சிதறி கிடந்தது. அதில் இருந்த காப்பர் கம்பிகள் திருடுபோயிருந்தது. நாங்கள் அக்கம் பக்கம் விசாரித்தோம். இரவில் இருந்தே மின்சாரம் இல்லை என்று சொன்னார்கள். இது சம்மந்தமாக AE திவாகர் மகேந்திரமங்கலம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்தார்கள். இது சம்மந்தமாக போலிசார் எங்களை விசாரித்தார்கள்.

**1 முதல் 6 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

லைன்மேன், ஒயர்மேன், லைன்இன்ஸ்பெக்டர், பீல்டு அசிஸ்டெண்ட் ஆகியோருக்கு பணியை பிரித்துக்கொடுத்து மேற்பார்வையிடுவது எனது பணி ஆகும். பொதுமக்கள் மின்சாரம் தொடர்பான பழுது, குறைபாடு சம்மந்தமான புகார்களை என்னிடம் தான் கொடுப்பார்கள் என்றால் சரிதான். வழக்கு சம்பவம்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.08 17:39:15 +0530

தொடர்பாக பொதுமக்கள் என்னிடம் புகார் கொடுக்கவில்லை. SS–5 16KVA என்ற டிரான்ஸ்பார்ம் அதிகபட்சமாக 16KVA ஆகும். மேற்படி மின்மாற்றியின் காப்பர் கம்பிகள் 10 கிலோ இருக்குமா என்றால் சரியல்ல 20 கிலோ இருக்கும். போலிசார் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் 20 கிலோ இருக்கும் என்று சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். ஒரு காப்பர் காயிலில் எத்தனை கிலோ கிராம் செம்பு இருக்கும் என போலிசார் விசாரணையிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். ஒரு காயிலில் எவ்வளவு எடை கொண்ட செம்பு கம்பிகள் இருக்கும் என என்னால் குறிப்பிட்டு கூற இயலாது. போலிசார் என்னை எனது உயரதிகாரி புகார் கொடுத்த சமயத்தில் விசாரித்தார்கள். சம்பவ இடத்தில் நாங்கள் செல்லும்போது பொதுமக்கள் 15–20 நபர்கள் இருந்தார்கள். மேற்படி நபர்களில் கணேசன் என்பவர் மட்டும் தெரியும் மற்றவர்கள் பெயர்கள் தெரியாது. சம்பவ இடத்திற்கு கைரேகை நிபுணர்கள் வரவில்லை. டிரான்ஸ்பார்மர் எப்படி கீழே விழுந்தது என எனக்கு நேரடியாக தெரியாது. மேற்படி மின்மாற்றி கடைசியாக எப்போது பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டது என்றால் மாதந்திர பராமரிப்பு அன்று பராமரிக்கப்பட்டது தேதி நினைவில்லை. போலிசாரிடம் கூறியது போல் தான் முதல்விசாரணையில் சாட்சியம்அளித்துள்ளேன். புகார் கொடுத்த சமயத்தில் விசாரித்ததற்கு பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பின்னிட்டு சாட்சி தன்னிச்சையாக 19.02.2025–ம் தேதி விசாரித்ததாக சாட்சியம் அளிக்கிறார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும், உயரதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மின்மாற்றியில் உள்ள செம்பு கம்பிகளின் எடை குறித்து பதிவேடு பராமரிக்கப்படுகிறதா என்றால் இல்லை. மின்மாற்றியில் உள்ள உபகரணங்கள் குறித்து பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான். மேற்படி பதிவேட்டை போலிசாரிடம் ஒப்படைத்தார்களா என்றால் நான் தரவில்லை.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.08 17:39:22 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : CC.No.91/2025 |
| Deposition of Witness for | : PW – 4 |
| Name and Age | : கார்த்திக் (வயது 26) |
| Father / Husband Name | : முருகன் |
| Occupation | : தொழில்நுட்ப உதவியாளர் |
| Village | : அரூர் |
| Taluk | : அரூர் |

**நாள்** – 08.06.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**A2, A4, A5 present. A1, A3, A6 absent. Petition U/s.355 of BNSS filed and allowed.**

**PW– 4**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் அரூரில் குடியிருந்துக்கொண்டு அதியமான்கோட்டையில் உள்ள மின்சார துறையில் தொழில்நுட்ப உதவியாளராக பணி செய்து வருகிறேன். 07.02.2025ம் தேதி இரவு கோடிக்கானூர் SS–5 16KVA என்ற டிரான்ஸ்பார்மில் திருடுபோயிருந்தது. கணேசன் என்பவர் மாதப்பன் லைன் இன்ஸ்பெக்டர் என்பவருக்கு டிரான்ஸ்பார்ம் திருட்டு பற்றி மறுநாள் தகவல் சொல்லியுள்ளார். மாதப்பன் காலை 07.30மணிக்கு எனக்கு தகவல் சொன்னார். நான் AE திவாகருக்கு தகவல் சொன்னேன். பின் AE திவாகர், மாதப்பன், யாசின் ஆகியோருடன் நானும் சம்பவ இடத்திற்கு போய் பார்த்தேன். சம்பவ இடத்தில் டிரான்ஸ்பார்மில் இருந்த ஆயில் கீழே கொட்டிக்கிடந்தது அதில் இருந்த காயில் திருடுபோயிருந்தது. இது சம்மந்தமாக காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். போலிசார் சம்பவ இடம் வந்து விசாரணை செய்தார்கள். அக்கம் பக்கம் விசாரித்தபோது திருடு குறித்து தெரியவில்லை என்று சொன்னார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

மின்மாற்றி எவ்வாறு கீழே விழுந்தது என எனக்கு நேரடியாக தெரியாது. போலிசார் விசாரணையிலும் அவ்வாறு தான் சொன்னேன். நாங்கள் சம்பவ இடம் சென்றபோது கணேசன், யாசின், மாதப்பன் மற்றும் ஊர் மக்கள் 20 நபர்கள் சம்பவ

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.08 17:39:29 +0530

இடத்தில் இருந்தார்கள். போலிசார் சம்பவ இடத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள். என்னை விசாரணை செய்த விசாரணை அதிகாரி பெயர் தெரியாது. போலிசார் என்னை 19.02.2025ம் தேதி விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தபோது காகிதத்தில் குறித்துக்கொண்டார்கள். அதை நான் படித்துப்பார்க்கவில்லை. போலிசார் என்னிடம் கையொப்பம் பெறவில்லை. வழக்கு மின்மாற்றியில் காயிலுக்கு எத்தனை கிலோ செம்பு இருக்கும் என்றால் 5-6 கிலோ செம்பு இருக்கும். மின்மாற்றியில் மொத்தம் 12 காயில் இருக்கும். போலிசார் மின்மாற்றியில் உள்ள செம்பு கம்பியின் எடை குறித்து விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். முதல்விசாரணையில் சொல்லியுள்ளது போல தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளவில்லை. நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும், உயரதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.08 17:39:35 +0530

Judicial Magistrate,
Palacode.